


திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் அமைச்சர் இ.பெரியசாமி கண்டன உரையாற்றினார். உடன் மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார், தலைமை கழக பேச்சாளர் வயலூர் கிருஷ்ணமூர்த்தி, மாநகர செயலாளர் ராஜப்பா, மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால்உசேன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, மேயர் இளமதிஜோதிபிரகாஷ், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், வெள்ளிமலை ஆகியோர் உள்ளனர்.




கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்ற தலைப்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் கடலூர் திருப்பாதிரிபுலியூர் தேரடித் தெருவில் நடைபெற்றது. அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கோவி.லெனின், துரை.கி.சரவணன், மேயர் சுந்தரி ராஜா, மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூ.2000 கோடி மிச்சப்படுத்தியுள்ளது கழக அரசு!

# அறப்போர் இயக்கம் உண்மைக்குப் புறம்பான தகவலை தெரிவித்துள்ளது!

## அமைச்சர் அர.சக்கரபாணி ஆதாரங்களை விளக்கி அறிக்கை!



சென்னை, மார்ச். 14-

அறப்போர் இயக்கம் மற்றும் சில அரசியல் தலைவர்களின் உண்மைக்குப் புறம்பான தகவல்களுக்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி மறுப்பறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் அர.சக்கரபாணியின் அறிக்கை வருமாறு:

கடந்த அதிமுக ஆட்சியில் சட்டமன்றத் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்துவதற்குச் சற்று முன் அவசர அவசரமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் போக்குவரத்து ஒப்பந்தத்தை 5 ஆண்டுகளுக்கு இறுதி செய்தது. இறுதி செய்யப்பட்ட போக்குவரத்துக் கட்டணம் மிகவும் அதிகமாக இருந்ததோடு ஒன்றிய அரசு நிபந்தனை மற்றும் வழிகாட்டுதலின்படியும் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்படவில்லை. இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை மண்டல வாரியாகப் போக்குவரத்து ஒப்பந்தம் போடப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக ஐந்தாண்டுகளுக்கு மாநில அளவில் ஒப்பந்தம் போடப்பட்டதால் ஒன்றிய அரசு போக்குவரத்துக்கான தொகையை விடுவிக்காமலிருந்தது. இந்நிலையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றவுடன் முறைகேடாகப் போடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பின் கடந்த ஆட்சியில் முறைகேடாகப் போடப்பட்ட போக்குவரத்து ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

**ரூ.2000 கோடி மிச்சப்படுத்தப்பட்டது!**

இதனால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ரூ.2,000 கோடி மிச்சப்படுத்தப் பட்டது. பின்பு ஒன்றிய அரசு வழிகாட்டுதலின் படி போக்குவரத்துக்கான ஒப்பந்தப்புள்ளி மண்டல வாரியாக இரண்டாண்டுகளுக்கு கோரப்பட்டது.

இடைப்பட்ட காலத்தில் மாவட்டங்களில் ஆங்காங்கே போக்குவரத்துக்கு உள்ளூர் நிலைமைக்கேற்ப தற்காலிகமாக மாவட்ட அளவிலான போக்குவரத்துக் கட்டண நிர்ணயக் குழு தெரிவித்த கட்டணம் கொடுத்து போக்குவரத்து இயக்கம் செய்யப் பட்டது.

பின்பு 39 மண்டலங்களுக்கும் (38 மாவட்டங்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக வசதிக்காக 39 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன) தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நிபந்தனைகளை நிறைவு செய்த ஒப்பந்தப்புள்ளிதாரர்களிடம் பலகட்ட பேச்சுவார்த்தை நடத்திப் பிற மாநிலங்களின் கட்டண விகிதம் மற்றும் சந்தை நிலவரத்தையொட்டி மாநில அளவிலான குழு கட்டணத்தை இறுதி செய்தது. அதனடிப்படையில் மண்டல அளவில் போக்குவரத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, 15.06.2024 முதல் மண்டல வாரியாகக் குறைந்த விலைப்புள்ளி அளித்த போக்குவரத்து நிறுவனங்களுக்குப் போக்குவரத்து செய்திட ஆணை வழங்கப் பட்டது. 15.06.2024 முதல் 28.02.2025 வரை இவர்களுக்கு அனைத்து மண்டலங்களிலும் வழங்கப்பட்ட தொகை ரூ.428.40 கோடி ஆகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பட்டியல் கட்டணம் (SOR) பெறப்பட்டதில் குறைந்த பட்சமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.273/-, அதிகபட்சமாக மதுரை மாவட்டத்தில் ரூ.479/- என்றிருந்தது. மாநில அளவிலான குழு இதன் சராசரியை ரூ.360/- எனக் கணக்கிட்டு அதிலிருந்து 20% குறைத்து ஒப்பந்தப்புள்ளியில் குறைந்தபட்ச கட்டணம் பெற வேண்டும் என்ற நோக்கில் 17.08.2022 அன்று மாநிலக் குழுவால் பட்டியல் கட்டணம் (SOR) ரூ.288/- என நிர்ணயம் செய்யப் பட்டது. ஆதலால் குறைந்த விலைப்புள்ளி பெற வேண்டும் என்ற நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட தொகை இது என்பதைப் புரிந்து கொள்ளாமல், உண்மைக்கு மாறான தகவல்களை அறப்போர் இயக்கம் வெளியிட்டுள்ளது.

மாநிலக் குழுவின் தலைவராக, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளரும், குழு உறுப்பினர்களாக இந்திய உணவுக் கழக செயல் இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர்,

இந்திய உணவுக் கழகப் பொது மேலாளர் (தெற்கு), மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர், மாவட்ட ஆட்சியர் திருவாரூர், அரசு துணைச் செயலாளர் (நிதித்துறை) மற்றும் அரசு துணைச் செயலாளர் (போக்குவரத்துத் துறை) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அறப்போர் இயக்கம் குறிப்பிட்டது போன்று இந்திய உணவுக் கழகத்தின் செயல் இயக்குநர் விடுப்பில் செல்லவுமில்லை, வேறு ஒருவர் அவர் சார்பில் கையொப்பமிடவில்லை. அவரே ஒவ்வொரு குழு கூட்டத்திலும் கலந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளார்.

**131 ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர்!**

சிலருக்காக ஒப்பந்த விதிகள் திருத்தப்பட்டதாக அறப்போர் இயக்கம் தெரிவித்துள்ளது. ஒப்பந்தப்புள்ளியில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் ஒன்றிய மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி மாநில அளவிலான குழு விதிகளை வகுத்துள்ளது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் 131 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், மேற்கண்ட போக்குவரத்து ஒப்பந்தத்தினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்கள்.21944/2024, 21946/2024 மற்றும் 23628/2024 ஆகியவற்றை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை 18.02.2025 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, எட்டரை மாதங்களுக்கு மொத்தமே ரூ.428 கோடி செலவான நிலையில் இரண்டாண்டுகளுக்கு ரூ.992 கோடி ஊழல் என்பதை விவரம் தெரியாதவர்களே ஏற்க முடியாத நிலையில் விவரம் அதிகம் தெரிந்ததாக 565 பக்கத்திற்கு அறிக்கை கொடுக்கும் இயக்கம் எவ்வாறு கூறுகிறது என்பது புரியாத புதிர். இதை வைத்துப்பார்க்கும் போது சரியாக எதையும் தெரிந்துகொள்ளாமல் யூகத்தின் அடிப்படையிலே அவர்களால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பருப்பு மற்றும் பாமாயிலை அதிக விலையில் கொள்முதல் செய்ததைக் கருத்திற்கொண்டு அதனைத் தவிர்க்கும் விதமாக அதிகமானவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள வழிவகை செய்து பாமாயில் மற்றும் பருப்பினைச் சரியான விலையில் கொள்முதல் செய்து அரசுக்குத் தொடர்ந்து செலவு குறைக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கட்டணத்தில் மட்டும் அரசுக்கு ரூ.2000 கோடி மீதமானது. பாமாயில் மற்றும் பருப்பு கொள்முதலில் அதிமுக ஆட்சியில் இறுதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மீண்டும் கொள்முதல் செய்த ஒரு ஒப்பந்தப்புள்ளி மூலம் மட்டுமே அரசுக்கு ரூ.177 கோடி மீதமானது.

**அ.தி.மு.க. ஆட்சியில் முறைகேடுகள்!**

நிலைமை இவ்வாறிருக்க கடந்த அதிமுக ஆட்சியின் போது நடைபெற்ற முறைகேடுகள் பற்றி வாயே திறக்காத சில அரசியல் கட்சித்தலைவர்கள் இப்போது தேவையற்ற வகையில் அறிக்கை விடுகிறார்கள்.

இந்திய உணவுக் கழக அலுவலர்களையும் மாநில அரசு அலுவலர்களையும் கொண்ட குழு முடிவு செய்ததை அறப்போர் இயக்கம் அறிந்தோ அறியாமலோ பாஜக அரசும் மாநில அரசும் சேர்ந்து அதிக கட்டணத்துக்கு ஒப்பந்தம் போட்டது போல் அரசியல் சாயத்துடன் செய்தி வெளியிட்டுள்ளார்கள்.

அறப்போர் இயக்கம் அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் உள்நோக்கத்துடன் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பொதுவெளியில் பரப்பியுள்ளது மிகவும் கண்டனத்திற்குரியதாகும்.

தரமான அரிசியையும் இதர இன்றியமையாப் பொருட்களையும் தாயினும் சாலப்பரிந்து காலத்தே வழங்கி வரும் நம் அரசைப் பொது மக்களும் எதிர்க்கட்சித் தலைவர்களுமே பாராட்டுவதைக் கூட அறியாமல் ரேசனில் சரியாகப் பொருட்கள் வழங்கப்படுவதில்லை என்று அறப்போர் இயக்கம் கூறியிருப்பது விநோதமாக உள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு உணவுத்துறையில் வெளிப்படைத்தன்மையுடன் செய்துள்ள அனைத்துச் செயல்களாலும் பொதுமக்களின் பாராட்டைப் பெற்று வரும் சூழலில் போக்குவரத்து ஒப்பந்தம் போடப்பட்டு ஒன்பது மாதங்கள் கழித்துத் திடீரென்று எதற்காக அறிக்கை விடுகிறார்கள் என்பது தெரியவில்லை.

நம் ஒப்பற்ற முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசின் ஆட்சியில் போக்குவரத்தாக இருந்தாலும் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதலாக இருந்தாலும் வெளிப்படைத் தன்மையுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் முடிவு செய்யப்படுகிறது.

“போற்றுவோர் போற்றட்டும் புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்”! என்பதற்கேற்ப முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மக்களுக்கு ஏற்றம் தரும் செயல்களைத் தொடர்ந்து செய்து தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கும் பணியில் மட்டுமே கவனமாக இருப்போம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




விருதுநகர் வடக்கு மாவட்டம் நகர தி.மு.க. சார்பில் ஒன்றிய அரசுக்கு எதிரான ‘தமிழ்நாடு போராடும் !தமிழ்நாடு வெல்லும்! ‘மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன் தலைமையில் நடைபெற்றது. திராவிட இயக்க தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் தலைமைக் கழக பேச்சாளர் குடந்தை ரமேஷ் உரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் எம்.எல்.ஏ., நகர் செயலாளர் எஸ் ஆர் எஸ் தனபாலன், ஒன்றிய செயலாளர்கள் பொன்னுத்தம்பி, சந்தான பாண்டியன், மந்திரி ஓடை கண்ணன், செல்வம் மற்றும் மாவட்ட நகர ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

## அரசு தலைமை கொறடா கா.இராமச்சந்திரன் அறிவிப்பு!

முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று (14.03.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கில்” நடைபெறும்.

அதுபோது கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 13.03.2025

**கா.இராமச்சந்திரன்**
அரசு தலைமை கொறடா

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமை!

# கொளத்தூர் கிழக்கு பகுதி சார்பாக மக்கள் முதல்வரின் மனிதநேய விழா - மாபெரும் புகழரங்கம்!

## தொல்திருமாவளவன் எம்.பி - கே.எம்.காதர் மொய்தீன் - பீட்டர் அல்போன்ஸ் புகழுரை!

சென்னை, மார்ச். 14-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 23, ஒன்று கூடுவோம் வென்று காட்டுவோம்! என்றும் இணக்கமாய் நின்று காட்டுவோம்!! எனும் தலைப்பில் கொளத்தூர் கிழக்கு பகுதியில், மாபெரும் புகழரங்கம் - 15.03.2025 சனிக்கிழமை, மாலை 6.00 மணியளவில், சென்னை, செம்பியம், ராகவன் தெருவில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் கொளத்தூர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, முன்னிலை வகிக்கின்றார்.

எ.நாகராசன் எம்.சி, எஸ்.பன்னீர்செல்வம், கே. சந்துரு, டி.லோகேஷ், சி.மகேஷ்குமார், எஸ்.தனசேகர், சரிதாமகேஷ்குமார் எம்.சி, துரைகண்ணன், தேவஜவகர், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார். கொளத்தூர் கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: பி.பழனி, இளா.இளங்கோவன், எஸ்.கே.ரமேஷ், எம்.தாவூத்பீ எம்.சி., எல்.டி.தாமஸ். வட்ட கழக செயலாளர்கள்: பி.பொன்முடி, பி.ஊமைதுரை, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.ரவி, கே.பி.ஆதவண்மணி, மாமன்ற உறுப்பினர்கள்: சி.ஸ்ரீதணி எம்.சி, யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதாபொன்னிவளவன் எம்.ச, கே.சாரதா எம்.சி. கொளத்தூர் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: எஸ்.டி.பாஸ்கர், க.விஜயரங்கம், எஸ்.முரளி, கே.சந்தானம், எம்.துளசி, எஸ்.பி. சதீஷ்பாபு, பி.வெங்கடேசன், ஜி.செல்வம், ஜி. பொன்னிவளவன், சி.சந்திரசேகர், புரசை ஜி. ராமகிருஷ்ணன், பொன்புகழேந்தி வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் தலைவர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - தொல்திருமாவளவன் எம்.பி, தலைவர் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் - கே.எம்.காதர் மொய்தீன், அகில இந்திய காங்கிரஸ் மூத்த தலைவர் - பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் மாவட்ட செயலாளர் / மாநில மாவட்ட தலைவர்கள்: து.அப்புன், கோதர்ஷா, ஜெ.டில்லி பாபு. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள்: இரா.சுபாஷ், மு.சதாசிவம், ப.மகேஷ்குமார், கு.திவாகர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் நிர்வாகிகள் ஆயிஷா, ஏ.எச்.எம்.இஸ்மாயில், சுலைமான் ஜாபர். அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகிகள் அனந்தராமன் அரிபாபு ஆர்.முரளி வில்லிவாக்கம் சுரேஷ் அகரம் கோபி. கொளத்தூர் மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: இரா.தயாளன் எம்.சாக்ரடீஸ் வி.வெங்கடேசன் ஆர்.காஞ்சனா பி.சூரி கொளத்தூர் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எம்.ஜெ.சி.பாபு பி.அதிபதி என்.ராமச்சந்திரன் எம்.டி.தமிழ்செல்வன் செ.முருகன் என்.சௌந்தர்ராஜன் என்.பவுல்ராஜ் கொளத்தூர் மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.ஆரோக்கியதாஸ் எம்.நாகராஜ் அ.கன்னியப்பன் டி.ஏ.ராஜன் ஆர்.மோகனசுந்தரம் எஸ்.சம்பத்குமார் ஜெ.சரவணன் என்.ரவிசந்திரன் ஆர்.சொக்கலிங்கம் எஸ்.நாகராஜன் ஏ.எம்.ராஜசேகர் ஆர்.ஜெ.வெங்கடரமணமூர்த்தி. மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்: எம்.சத்யா துரை வெங்கடேசன் ஆ.சு.அசோக்குமார் கே.எஸ்.சபரிநாத் வி.அருண்ராஜன் சொ.பழனி எஸ்.சின்னராஜா சட்டர்க.ஜெயபால் பி.பாஸ்கர் எஸ்.துளசிகுருபரன் எஸ்.மணிவண்ணன் எஸ்.சுகுமார் எஸ்.தினேஷ் வி.ஜெ.கஜேந்திரன் எஸ்.ஸ்ரீநாத் வெற்றிநகர் இ.சிவா எஸ்.மதன் சி.வி.யோகராஜ் என்.வேலன் எ.முகம்மது இஸ்மாயில் ஜி.லட்சுமணன் டி.சரவணன் ஜி.எஸ்.பிரகாஷ் டி.ரமேஷ் எ.சதீஷ்குமார் எஸ்.டி.சீனிவாசன் பெ. குருநாதன் பிரவீன்சேட் மகாராஜன் என் எவேலன் சு.கி.ராஜ் கே.சதீஷ்பாலு எம்.துரை அருண்மனோகர் பி.சுரேஷ் கே.கங்காதரன் கௌரிகுருபரன் வி.பிரபாவதி எஸ்.விஜயலட்சுமி பெரியார் பிரியா டி.தமிழ்ச்செல்வி யமுனாதேவி த.ஹேமலதா பி.முனுசாமி உதயகுமார் ஜெகதீஷ் பிளம்பர் ஆறுமுகம் மல்லிபூநகர் சிவா. கொளத்தூர் கிழக்கு பகுதி அணிகளின் அமைப்பாளர்கள்: சுரேஷ் கருணாநிதி ஜி.எம்.சாய்ஸ்ரீகாந்த் மோ.இமானுவேல் பி.கே.பழனி எஸ்.சுரேஷ் எஸ்.விஜயன்குமார் ஜெ.வரலட்சுமி, சி.அனிதா ப.அஸ்வின் எஸ்.ஷ்ரவணகுமார் தினேஷ்பாபு சோ.சத்தியநாராயணன் சு.தணிகைவேல் சு.சுஜாதா. கொளத்தூர் கிழக்கு பகுதி மாணவர்கள் அணி அமைப்பாளர்கள்: எஸ்.உதயகுமார் கொளத்தூர் இரா.விஜய் கே.விக்னேஷ் எஸ்.அலெக்ஸாண்டர் ஜி.ஜனர்தனன், என்.செந்தில் ஆர்.சூர்யா கே. ராஜேஷ் பி.தமிழ்செல்வன். கொளத்தூர் கிழக்கு பகுதி வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள்: பி.கலையரசன் ஜி.எம்.செல்வம் ஜி. சிவக்குமார் எம்.மதியரசன் பி.கார்த்திக் கே.சுரேஷ். கொளத்தூர் கிழக்கு பகுதி ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர்கள்: எம்.செல்லையா ஏரிக்கரை எம்.ஸ்ரீதர் திராவிட எப்.பிரகாஷ் கே.மதியரசன் எல்.லாரன்ஸ் ஆர்.மணிகண்டன் பி.கோபி. கொளத்தூர் தொகுதி பகுதி வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்: எ. ஆர்.தங்கவேல் டி.மோகன் எஸ்.விஜியகுமார் எஸ்.ரமேஷ் எஸ்.ரவிகுமார் அ.ஸ்ரீதர் ஜி.வெங்கடேசன் ப.பிரகாஷ் கி.ராஜேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நலத்திட்ட விழாவில் ப.அன்பரசு, டி.சந்திரசேகர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

# சென்னை மேற்கு மாவட்டம் நடத்தும் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



**இன்று (14-03-2025 - வெள்ளிக்கிழமை) நடைபெறும் பொதுக் கூட்டம் விபரம் வருமாறு:-**

| வ. எண் | வட்டம் / அணி | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 113அ | த, தேவராஜ் வட்டக் கழக செயலாளர் | தர்மாபுரம் மெயின் ரோடு, (மாதா கோயில் அருகில்) | சென்னை அரங்கநாதன் தலைமைக்கழக பேச்சாளர் பம்மல் வி. தினேஷ் தலைமைக்கழக பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் / தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.